**O.S. No. 190/2024**
**Date : 24.04.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 2 **திரு. பாலமுருகன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனக்கு வாதி லட்சுமி அம்மாளை சிறு வயது முதல் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தெரியும், எனது உறவினர்தான். எனக்கு அவர் தூரத்து உறவுமுறை. அவர் நிலங்களை விவசாய குத்தகைக்கு எடுத்து தொழில் செய்து வருகிறார். இது தவிர அவர் வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. வாதிக்கும், அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையே அவர்களது பூர்வீக சொத்து சம்பந்தமாக பாகம் பிரிவினை சுமூகமாக பேசி முடித்தது பற்றி நான் கேள்விப்பட்டேன். அது சம்பந்தப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது.

2. பிரதிவாதியை நான் தாவா புரோநோட் எழுதிய தினம் அன்றுதான் நான் பார்த்திருக்கிறேன், அதற்கு முன்பு அவரை நான் பார்த்தது கிடையாது. தாவா புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்த சக்திவேல் என்பவரை நான் அன்றைய தினம் தான் முதல்முறையாக பார்த்தேன். அவ்வாறு சாட்சி கையொப்பம் போட்ட பிறகு நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வருவதற்கு முன்பு வரை இடையில் நான் சக்திவேலை பார்க்கவில்லை, ஏனென்றால் அவர் பிரதிவாதி அழைத்து வந்த நபர்.

3. சக்திவேல் யார் என்ன தொழில் செய்கிறார் என்ற விபரங்கள் நான் அவரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. நான் பிரதிவாதி வருவதற்கு முன்பாகவே வாதி வீட்டிற்கு சென்று விட்டேன். பிரதிவாதி பெயர், முகவரி, கையெழுத்து ஆகியவை தாவா புரோநோட்டில் சரியாக உள்ளதா என்பதை நான் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் பார்த்து தெரிந்து கொண்டேன். கையெழுத்து போடும்போது நான் பார்த்தேன்.

4. 2 – 3 முறை மட்டும் வட்டி செலுத்தியதாக வாதி என்னிடம் தெரிவித்தார் அதன் பிறகு செலுத்தாததால் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். இந்த வழக்கு சம்பந்தமாக பஞ்சாயத்து எதுவும் பேசப்பட்டதா என்றால் அவ்வாறு பேசவில்லை. வாதிதி எனது உறவினர் என்பதால் மோசடியாக அவர் தயாரித்த தாவா புரோநோட்டுக்கு ஆதரவாக நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.24 15:31:57 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.